# சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்புத் திட்ட முகாம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்! பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்று தீர்வுகளை வழங்கினார்!

**சென்னை, ஜுலை 16 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறப்புத் திட்டமான "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற முகாமினை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளை வழங்கினார்.**

முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டமான "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மகாவீர் ஜெயின் பவன் திருமண மண்டபத்தில் நேற்று (15.7.2025) நடைபெற்ற முகாமினை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளை வழங்கினார்.

முதலமைச்சர் அவர்கள் மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள், திட்டங்களின் கீழ் பொதுமக்களின் குறைகளை வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை, கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் நேற்று தொடங்கி வைத்தார். "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் ஜுலை 15 முதல் நவம்பர் 2025 வரை அனைத்து மாவட்டங்களிலும் 10,000 முகாம்கள் நடைபெறவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நகர்புறப் பகுதிகளில் 3,768 முகாம்களும், ஊரகப் பகுதிகளில் 6,232 முகாம்களும் நடைபெற உள்ளன. இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்பட உள்ளன. அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்பட உள்ளன.



முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டமான "உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் சென்னை சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மகாவீர் ஜெயின் பவன் திருமண மண்டபத்தில் நேற்று (15.7.2025) நடைபெற்ற முகாமில் ஒரு மாணவிக்கு ஆதார் அட்டை வழங்கும் பணிக்காக கருவிழி ஸ்கேன் செய்யப்படுவதை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.டி.ஜி.வினய், இணை ஆணையர் சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன், துணை ஆணையர்கள் பிரிதிவிராஜ், எச்.ஆர்.கௌஷிக், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. சு.கீதா மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தின் கீழ், தன்னார்வலர்கள் 7.7.2025 முதல் ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று, முகாம் நடைபெறும் நாள். இடம் குறித்த விவரங்கள், அங்கு வழங்கப்படவுள்ள பல்வேறு அரசு துறைகளின் திட்டங்கள்/ சேவைகளை விவரித்து, அவற்றில் பயனடைவதற்கான தகுதிகள், தேவைப்படும் ஆவணங்கள் குறித்து தெரிவிப்பதோடு தகவல் கையேட்டினையும், விண்ணப்பத்தினையும் வழங்கி வருகின்றனர். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் மட்டுமே வழங்கப்படும். மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று, விண்ணப்பத்தினை பெற்று, பூர்த்தி செய்து தங்கள் விண்ணப்பத்தினை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் முதற்கட்டமாக 15.07.2025 முதல் 14.08.2025 வரை "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் 109 முகாம்கள் நடைபெறுகிறது. இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும்.

சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, எரிசக்தித்துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படு த்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை உள்ளிட்ட 13 அரசுத்துறைகள் மூலம் மக்களிடமிருந்து மனுக்கள் பெற்று உரிய பதிவுகளை மேற்கொண்டு அதற்கான ஒப்பமும் வழங்கப்பட்டது. முகாமிற்கு வருகை தந்த பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், சிறப்பு மருத்துவ முகாமும் நடத்தப்பட்டது.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் இந்த முகாமில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பத்தினை பெற்று பூர்த்தி செய்து வழங்கினர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மகாவீர் ஜெயின் பவன் திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்ற முகாமினை பார்வையிட்டு மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், ஆணையாளர் ஜெ.குமரகுரு பரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர். டி.ஜி.வினய், இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெய சீலன், துணை ஆணையர்கள் பிரிதிவி ராஜ், எச்.ஆர்.கௌஷிக், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. சு.கீதா மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் - முதல்வர் தொடங்கி வைத்தார்!

... முதல் பக்கத் தொடர்ச்சி

ஊரகப் பகுதிகளில் 15 அரசுத் துறைகளின் 46 சேவைகளும் வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்களின் மீது, உடனடியாகத் தீர்வு கிடைக்கக்கூடிய இனங்களில் உடனடியாகத் தீர்வு காணப்படும். பிற இனங்களில் அதிகபட்சமாக 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

**மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!**

முதலமைச்சர் அவர்கள், 11.7.2025 அன்று தலைமைச் செயலகத்தில், மாவட்டங்களில் தன்னார்வலர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் குறித்து வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளப்பட்டு வரும் விழிப்புணர்வு பணிகள், முகாம்கள் தொடர்பான முன்னேற்றப்பணிகள், முகாம்களில் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்துதருவது ஆகியவை குறித்து, மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், பொதுமக்கள் அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகளை, அவர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே பெற்றுக்கொள்ள வசதியான அரசின் மிக முக்கியமான முன்னெடுப்பு, இத்திட்டம் என்றும், இந்த முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது சரியான தீர்வினை வழங்கும் வகையில் அர்ப்பணிப்பு உணர்வுடன் அனைவரும் பணியாற்றிட வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்.

இத்திட்டத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியர் தலைமை ஒருங்கிணைப்பாளராக செயல்படுவார். வீடு, வீடாக விழிப்புணர்வு பணி மேற்கொள்வதற்கும், முகாம்களை ஏற்பாடு செய்வதற்கும், ஒவ்வொரு ஒன்றியம், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிக்கும் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாகத் தீர்வு!**

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ், கடலூர் மாவட்டத்தில் மொத்தம் 378 "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்கள் நடைபெறுகின்றன. இதில் ஊரகப் பகுதிகளில் 248 முகாம்களும், நகர்ப்புற பகுதிகளில் 130 முகாம்களும் நடைபெறும். சிதம்பரம் நகராட்சியில் மட்டும் 13 முகாம்கள் நடத்தப்படும்.

முதலமைச்சர் அவர்கள் சிதம்ப ரத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை தொடங்கி வைத்து, ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே, காதொலி கருவி வேண்டி விண்ணப் பித்த சபரீஷ் என்ற மாற்றுத்திறனாளி பயனாளிக்கு காதொலி கருவியையும், மருத்துவ காப்பீட்டு அட்டை வேண்டி விண்ணப்பித்த திருமதி செந்தமிழ் செல்வி என்ற பயனாளிக்கு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மருத்துவ காப்பீட்டு அட்டையும், மின்சார இணைப்பு பெயர் மாற்றம் வேண்டி விண்ணப்பித்த பெருமாள் என்ற பயனாளிக்கு மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கான ஆணையினையும் வழங்கினார்.

**கண்காட்சி அரங்கம்: முதல்வர் பார்வையிட்டார்!**

மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் வேளாண்மை - உழவர் நலத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை போன்ற பல்வேறு துறைகளின் சார்பில் அரசின் திட்டங்களை விளக்கி அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்குகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

முதலமைச்சர் அவர்களால் சிதம்பரத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் தொடங்கி வைக்கப்பட்ட இன்றையதினமே தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் அந்தந்த மாவட்டங்களைச் சார்ந்த அமைச்சர் பெருமக்களால், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களால் முகாம்கள் தொடங்கி வைக்கப்பட்டு, மக்களிடம் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

இந்த நிகழ்வில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல்.திருமா வளவன், து.ரவிக்குமார், டாக்டர். எம்.கே. விஷ்ணு பிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் கு.செல்வப் பெருந் தகை, சிந்தனைச்செல்வன், தி.வேல் முருகன், சபா. ராஜேந்திரன், கோ. அய்யப்பன், ராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், முதல்வரின் முகவரித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் / சிறப்பு அலுவலர் (மு.கூ.பொ), திருமதி.பெ.அமுதா, கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### எளிய தலைவராக வாழ்ந்த கர்மவீரர் காமராஜர் பிறந்த நாளில்

# மக்களை நாடி அரசு செல்லும் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் தொடக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சிதம்பரம், ஜுலை 16 -

கர்மவீரர் காமராசர் அவர்களின் பிறந்தநாளில், "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தை தொடங்கி வைத்தது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கதர்ச் சட்டை அணிந்து கருப்புச் சட்டைக் காரரின் பணிகளைச் செய்த கர்மவீரர் காமராசர்!**

**தந்தை பெரியாரின் வழிகாட்டலில் ஆட்சி நடத்திய பச்சைத் தமிழர்!**

**திறமை என்பது பிறப்பால் வருவதல்ல, வாய்ப்பு கொடுத்தால் எவரும் பெறுவது என ஓங்கி உரைத்த பெருந்தலைவர்!**

**மக்களோடு மக்களாக எளிய தலைவராக வாழ்ந்த அவரது பிறந்தநாளில் அவருக்கு மரியாதை செலுத்தி, மக்களை நாடி அரசு செல்லும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தைத் தொடங்கி வைத்தேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம், ஏரலில் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ள திமுக மூத்த நிர்வாகி சக்திவேலை, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணநிதி நேரில் சந்தித்து நலம், விசாரித்து நிதியுதவி தொகையை வழங்கினார். மேலும், கனிமொழி கருணாநிதி எம்.பி. தொலைபேசி வாயிலாக தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலினை தொடர்பு கொண்டு, முதலமைச்சர் சிறிது நேரம் தி.மு.க. மூத்த நிர்வாகி சக்திவேலிடம் உரையாடி, உடல்நிலை குறித்து நலம் விசாரித்தார். தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மீன்வளத்துறை மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் ராஜாக் க மங்கலம் தெற்கு ஒன்றியம் ஆத்திக்காட்டுகளை ஊராட்சி பூத் எண் 166 இல் கழகத் தலைவர் மு க ஸ்டாலின் ஆணைக்கிணங்க கழக துணை அமைப்புச் செயலாளர் எஸ் ஆஸ்டின் (முன்னாள் எம்.பி.) தனது உறுப்பினர் அட்டையை புதுப்பித்து வீடு விடாக சென்று ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையை துவக்கி வைத்தார்.உடன் தெற்கு ஒன்றிய செயலாளர் லிவிங்ஸ்டன் மற்றும் குமரேசன் ஹரிச்சந்திரன் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் முத்துலிங்க பெருமாள் ஆத்தி காட்டுகளை ஊராட்சி தலைவர் விஜயன் துணைத் தலைவர ஞான வினோ ராஜா வைகுண்ட ராஜா மாவட்ட பிரதிநிதிகள் பாலகிருஷ்ணன் ராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.